பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 07 2024 **SUNDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்வது குறித்து விவாதிப்பதற்கான அனைத்துக்கட்சி கூட்டம் புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.

2. தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளை மத்திய பட்ஜெட் பூர்த்தி செய்யும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. ரயில் நிலையங்களில் பயணிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

4. மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 48 மணிநேரத்தில் 14 அடி உயர்ந்துள்ளது.

5. உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் --

<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்வது குறித்து விவாதிப்பதற்கான அனைத்துக்கட்சி கூட்டம் புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.

மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு கிரண் ரிஜிஜூ, திரு அர்ஜுன் ராம் மெக்வால், திரு ஜெ பி நட்டா, திரு சிராக் பாஸ்வான் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

காங்கிரஸ் கட்சி சார்பில், திரு ஜெய்ராம் ரமேஷும், தேசியவாத காங்கிரஸ் கட்சி சார்பில் திரு பிரஃபுல் பட்டேலும், திமுக சார்பில் திரு டி ஆர் பாலு மற்றும் திருச்சி சிவா உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்கி, அடுத்த மாதம் 12-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நாளை மறுநாள் தாக்கல் செய்கிறார்.

இந்த கூட்டத்தொடரில் ஆறு புதிய மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

நீட் தேர்வு விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை இந்த கூட்டத்தொடரில் எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

இதற்கிடையே, தமிழக மக்களின் எதிர்பார்ப்பை மத்திய பட்ஜெட் பூர்த்தி செய்யும் என்று நம்புவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி விடுவிக்கப்பட வேண்டும்,

தாம்பரம் - செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவுச் சாலைத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்,

வருமானவரிச்சுமை குறைக்கப்பட வேண்டும்,

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்க வேண்டும் போன்றவை தமிழக மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்ற குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட புதிய ரயில்வேத் திட்டங்களை விரைந்து செயல்படுத்தி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

நகர்ப்புற மற்றும் ஊரகவீட்டுவசதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான செலவு வரம்பை உயர்த்த வேண்டும் போன்ற கோரிக்கைகளையும் மத்திய அரசு இந்த பட்ஜெட்டில் நிறைவேற்றும் என்று நம்புவதாக திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

ரயில் நிலையங்களில் பயணிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புனே ரயில் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்த ரயில் நிலையத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்த ஆய்வின் போது விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

புனே ரயில் நிலையத்தின் பாரம்பரியமும் பாதுகாக்கப்படும் வகையில் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

குஜராத், ராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களில் ஏற்பட்டுள்ள வைரஸ் பாதிப்பு குறித்து சுகாதாரத்துறைகளுக்கான தலைமை இயக்குனர் திரு **Atul Goel** ஆலோசனை மேற்கொண்டார்.

சுகாதாரத்துறை நிபுணர்கள் பங்கேற்ற இந்த ஆலோசனைக்கூட்டத்தில் **AES** வைரஸ் பாதிப்பு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இதுகுறித்து விரிவான ஆய்வு மேற்கொள்வதற்கு பல்துறை நிபுணர் குழுவை குஜராத்துக்கு அனுப்புவது என இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்த பாதிப்பு குஜராத்தில் 78 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ராஜஸ்தானில் 2 பேரும், மத்தியப்பிரதேசத்தில் ஒருவரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய் பாதிப்பு காரணமாக இதுவரை 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் பிஜேபி-யின் மாநில மாநாடு புனேயில் தற்போது நடைபெற்று வருகிறது.

மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைத் தேர்தலில் மேற்கொள்ளப்பட வேண்டிய அணுகுமுறை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

இந்த மாநாட்டில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.

<<<<<>>>>>>

தெலங்கானா அரசின் **Sri Dasarathi Krishnamacharya** விருது பிரபல எழுத்தாளர் **Jukanti Jagannatham –**க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**Dasarathi Krishnamacharya** பிறந்த தின கொண்டாட்டங்களின்போது இந்த விருது வழங்கப்படும் என்று அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட **Jukanti Jagannatham –**க்கு தெலங்கான முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

உலக பாரம்பரிய குழுவின் கூட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் தொடங்கிவைக்கிறார்

பாரத் மண்டபத்தில் இரவு ஏழு மணிக்கு இக்கூட்டத்தை தொடங்கிவைத்து பிரதமர் உரையாற்ற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

யுனஸ்கோவின் பாரம்பரிய குழுவின் கூட்டம் முதல் முறையாக இந்தியாவில் நடைபெறுகிறது.

இந்த கூட்டம் இம்மாதம் இறுதிவரை நடைபெறவுள்ளது.

பாரம்பரிய சின்னங்களின் பாதுகாப்பு, அதற்கான செலவுகளை சர்வதேச பாரம்பரிய நிதியத்தில் இருந்து வழங்குவது, புதிய இடங்களை தேர்வு செய்வது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<<>>>>>

குரு பூர்ணிமா இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கனமழை நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மகாராஷ்ட்ரா, குஜராத், மத்தியப்பிரதேசம், சட்டீஸ்கர், கர்நாடகா, ஹரியானா, அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தராகண்டில் அடுத்த 48 மணிநேரத்திற்கு கனமுதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

அம்மாநிலத்துக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் இன்றும் நாளையும் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், நீர்நிலைகளின் அருகே செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, அம்மாநிலத்தின் **Rudraprayag** மாவட்டத்தில் நேரிட்ட நிலச்சரிவில் மூன்று பேர் உயிரிழந்தனர். எட்டு பேர் காயமடைந்தனர்.

**Gaurikund – Kedarnath** வழித்தடத்தில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் கூறியுள்ளது.

அப்பகுதியில் மீட்புப்பணிகள் தற்போது முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தெலங்கானாவில் பெய்துவரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, தெலங்கானா – ஆந்திரப்பிரதேசம் இடையேயான சாலை போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கோதாவரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

குஜராத் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பெய்தது.

போர்பந்தரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா ஆய்வு செய்தார்.

இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நாளை வரை கனமழை நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, கர்நாடக ஆணைகளிலிருந்து திறந்துவிடப்படும் உபரி நீர் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 48 மணிநேரத்தில் 14 அடி உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*__(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 40 செகண்ட்ஸ்)__*

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அணைகளும் நிரம்பி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*__(வாய்ஸ் பைட் - ராஜசேகரன் - 35 செகண்ட்ஸ்)__*

**<<<<<>>>>>>**

*__விளையாட்டுச் செய்திகள்__*

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்காவின் **Hoston**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியா 2-0 என்ற ஆட்டக்கணக்கில் கனடாவை வென்றது.

காலிறுதியில் இந்தியா - கொரியாவை எதிர்கொள்கிறது.

மகளிர் பிரிவு லீக் சுற்றின் மூன்று ஆட்டங்களில் வெற்றிபெற்றதன் மூலம் இந்தியா காலிறுதிக்கு தகுதி பெற்றது.

**<<<<<>>>>>>**

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் உத்தம் ரானா வெண்கலப்பதக்கம் வென்றார்.

தாய்லாந்தின் **Sriracha-**வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 130 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**<<<<<>>>>>>**

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸை எதிர்கொள்கிறது.

**<<<<<END>>>>>>**